கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தென்காசி

முன்னிலை:- திரு.எஸ். மனோஜ்குமார், எம்.ஏ., எம்.எல்.,

கூடுதல் மாவட்ட நீதிபதி, தென்காசி.

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28 ஆம் நாள் திங்கள்கிழமை

**அசல் வழக்கு எண்.191/2021**

( CNR No.TNTS-01-000624-2021 )

மதார் முகைதீன் … வாதி

..எதிர்..

முருகன் … பிரதிவாதி

இந்த வழக்கானது 16.04.2025 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.ராஜ்மகேந்திரன் அவர்களும், பிரதிவாதி தரப்பில் முன்னதாக வழக்கறிஞர் திரு.கே.சண்முகசுந்தரம் அவர்களும் முன்னிலையாகியுள்ள நிலையில், வாதி தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதற்காக வாய்தா ஏற்பட்டிருந்த சமயத்தில் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரால் பிரதிவாதி தரப்பில் எவ்வித தகவலும் இல்லை என எடுத்துக்கப்பட்ட காரணத்தினாலும், பிரதிவாதி நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததாலும், வாதி தரப்பு வழக்கறிஞர்கள் நிகழ்த்திய வாதுரைகளைக் கேட்டறிந்தும், வாதி தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**தீர்ப்புரை**

பிராது தபசில் சொத்தின் அனுபவத்தை பிரதிவாதி நீதிமன்றம் குறிப்பிடும் காலக்கெடுவிற்குள் வாதியிடம் ஒப்படைத்துப்போக உத்தரவிடக்கோரியும், அவ்வாறு பிரதிவாதி செய்துபோக தவறும்பட்சத்தில் நீதிமன்றம் மூலம் பிரதிவாதியை தபசில் சொத்திலிருந்து அப்புறப்படுத்தி மேற்படி சொத்தை சுவாதீனம் எடுத்து வாதியிடம் அனுபவம் ஒப்படைத்துப்போக உத்தரவிடக்கோரியும், தபசில் சொத்தை பிரதிவாதி அனுபவித்து வந்ததற்கான கடந்த கால வரும்படி தொகையாக ரூ.1,80,000/- ஐ நீதிமன்றம் குறிப்பிடும் காலக்கெடுவிற்குள் வாதிக்கு பிரதிவாதி 12 சதவிகித பின்வட்டியுடன் செலுத்திப்போக உத்தரவிடக்கோரியும், பிராது தேதி முதல் தபசில் சொத்தை வாதியிடம் பிரதிவாதி அனுபவம் ஒப்படைக்கும் தேதி வரைக்கான எதிர்கால வரும்படி தொகையை வாதிக்கு பிரதிவாதி செலுத்த உத்தரவிடக்கோரியும், செலவுத்தொகை கோரியும் இந்த வழக்கானது வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **வழக்குரையின் சுருக்கம்**:

இந்த வழக்கின் பிராது தபசில் சொத்தானது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு பாத்தியப்பட்டதாகும். வாதியின் விண்ணப்பத்தின்பேரில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் ஒரு வீடு கட்டப்பட்டு அனுபவமானது வாதியிடம் ஒப்படைக்கப்பட்டு, தபசில் வீட்டை வாதி அனுபவித்து வந்தார். பின்னர் கிரையத் தொகையானது வாதியால் தவணை முறையில் செலுத்தப்பட்டு, முழுத் தொகையும் செலுத்தப்பட்ட பின்னர் வாதிக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் தபசில் சொத்தானது கிரயம் கொடுக்கப்பட்டு வாதி அனுபவித்து வந்த நிலையில், வாதியின் மருமகன் மூலமாக பிரதிவாதி தபசில் வீட்டில் குடியிருக்க அனுமதி கேட்டதில், தவணை தொகை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு பிரதிவாதி, வாதி சார்பாக செலுத்த வேண்டுமென்ற நிபந்தனையின்பேரில் வாதியால் பிரதிவாதி அனுமதிக்கப்பட்டு, பிரதிவாதி 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தபசில் வீட்டில் குடும்பத்துடன் குடியிருந்து வந்தார். ஆனால் ஒப்புக்கொண்டபடி பிரதிவாதி தவணைதொகைகளை உரிய காலத்தில் செலுத்தாமல் காலதாமதம் செய்து 2013 ஆம் ஆண்டு வரை செலுத்தியுள்ளார். இந்நிலையில் தபசில் வீடானது வாதியின் சொந்த அனுபவத்திற்கு தேவைப்பட்டதால் பிரதிவாதியிடம் வீட்டை காலி செய்து ஒப்படைக்கக்கோரி வாதி கேட்டதற்கு பிரதிவாதி கால தாமதம் செய்து வந்தார். எனவே வாதி, பிரதிவாதிக்கு தபசில் சொத்தின் காலி சுவாதீனம் கோரியும், தபசில் வீட்டை பிரதிவாதி அனுபவித்து வருவதற்கான மத்தியகால வரும்படி கோரியும் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியுள்ளார். மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்ட பிரதிவாதி தவறான சங்கதிகளுடன் பதில் அறிவிப்பு அனுப்பியிருக்கிறார். எனவே வாதியால் இந்த வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **எதிர்வழக்குரையின் சுருக்கம்**:

பிராது சங்கதிகள் உண்மையானவைகள் இல்லை. தபசில் சொத்தை அனுபவித்து வரும் பிரதிவாதி கடந்த 2013 ஆம் வருடமே மத்தியஸ்தர்கள் முன்னிலையில் வாதியிடம் பேசியபடி தவணை தொகை முழுவதையும் கட்டி முடித்துவிட்டார். ஆனால் ஒப்புக்கொண்டபடி வாதி தான் தபசில் சொத்தை பிரதிவாதிக்கு கிரையம் கொடுக்க முன்வரவில்லை. பிரதிவாதியே அவரது சொந்த செலவில் தபசில் சொத்திற்கு மின் இணைப்பு, குடிநீர் இணைப்பு பெற்று கட்டணங்கள் செலுத்தி அனுபவித்து வருகிறார். வாதி அடிப்படை ஆதாரம் இல்லாமல் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார். எனவே வாதியிடமிருந்து பிரதிவாதிக்கு ரூ.50,000/- இழப்பீடு கிடைக்க வேண்டியதாக உள்ளது. எனவே வாதி கோரும் பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கக் கூடியதல்ல. எனவே வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. வழக்குரை, எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலித்த பின்னர் இவ்வழக்கின் தீர்விற்காக கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டது.

1. பிராது தபசில் சொத்தைப் பொறுத்து வாதி கோரியுள்ள காலி சுவாதீன பரிகாரம் வாதிக்கு கிடைக்கக் கூடியதா?
2. வாதி கோரியுள்ள கடந்த கால வரும்படி வட்டியுடன் வாதிக்கு கிடைக்கக் கூடியதா ?
3. வாதி கோரியுள்ள எதிர் கால வரும்படி வட்டியுடன் வாதிக்கு கிடைக்கக் கூடியதா ?

4. பிரதிவாதி கோரிய நிறையீட்டு செலவுத்தொகை பிரதிவாதிக்கு கிடைக்கக் கூடியதா?

5. வாதிக்கு கிடைக்கக் கூடிய வேறு பரிகாரம் என்ன?

5. இவ்வழக்கில் வாதி தரப்பில், வாதி வா. சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. **எழுவினா எண்.1 –ற்கான தீர்வு**:

➢ பிராது தபசில் சொத்தைப் பொறுத்து வாதி கோரியுள்ள காலி சுவாதீன பரிகாரம் வாதிக்கு கிடைக்கக் கூடியதா?

இவ்வழக்கின் வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், பிராது தபசில் சொத்தானது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு பாத்தியப்பட்டதாகும் என்றும், வாதியின் விண்ணப்பத்தின்பேரில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் ஒரு வீடு கட்டப்பட்டு அனுபவமானது வாதியிடம் ஒப்படைக்கப்பட்டு, கிரையத் தொகையானது வாதியால் தவணை முறையில் செலுத்தப்பட்டு, முழுத் தொகையும் செலுத்தப்பட்ட பின்னர் வாதிக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் தபசில் சொத்தானது கிரையம் கொடுக்கப்பட்டு வாதி அனுபவித்து வந்த நிலையில், வாதியின் மருமகன் மூலமாக பிரதிவாதி தபசில் வீட்டில் குடியிருக்க அனுமதி கேட்டதில், தவணை தொகையை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு பிரதிவாதி, வாதி சார்பாக செலுத்த வேண்டுமென்ற நிபந்தனையின்பேரில் வாதியால் பிரதிவாதி அனுமதிக்கப்பட்டு, பிரதிவாதி 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தபசில் வீட்டில் குடும்பத்துடன் குடியிருந்து வந்ததாகவும், ஆனால் ஒப்புக்கொண்டபடி பிரதிவாதி தவணைதொகைகளை உரிய காலத்தில் செலுத்தாமல் காலதாமதம் செய்து 2013 ஆம் ஆண்டு வரை மட்டுமே செலுத்தியுள்ளதாகவும், இந்நிலையில் தபசில் வீடானது வாதியின் சொந்த அனுபவத்திற்கு தேவைப்பட்டதால் பிரதிவாதியிடம் வீட்டை காலி செய்து ஒப்படைக்கக்கோரி வாதி கேட்டதற்கு பிரதிவாதி கால தாமதம் செய்து வந்ததாகவும், எனவே வாதி, பிரதிவாதிக்கு தபசில் சொத்தின் காலி சுவாதீனம் கோரியும், தபசில் வீட்டை பிரதிவாதி அனுபவித்து வருவதற்கான கடந்த கால மற்றும் எதிர்கால வரும்படி கோரியும் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியதாகவும், மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்ட பிரதிவாதி தவறான சங்கதிகளுடன் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளதாகவும் எனவே தபசில் சொத்தின் காலி சுாவதீனமானது பிரதிவாதியிடமிருந்து, வாதிக்கு கிடைக்க உத்தரவிடக் கோரி வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதிட்டிருக்கிறார்.

7. வாதி தரப்பு மேற்படி வாதத்தை நிரூபிக்கும் வகையில் வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டிருக்கிறார். வா.சா.1 அவரது சாட்சியத்தில் வழக்குரை சங்கதிகளை அனுசரித்து சாட்சியம் அளித்துள்ளார். வாதி தரப்பில், 22.01.2021 ஆம் தேதியன்று தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், திருநெல்வேலியிடமிருந்து வாதி பெற்ற கிரையப் பத்திரத்தின் அசலானது வா.சா.ஆ.1 ஆகவும், தபசில் சொத்திற்கு வாதி செலுத்திய தீர்வை ரசீது வா.சா.ஆ.2 ஆகவும், தபசில் சொத்திற்கு வாதி செலுத்திய தீர்வை ரசீதுகள் வா.சா.ஆ.3 ஆகவும், மின் கட்டண ரசீது வா.சா.ஆ.4 ஆகவும், வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.5 ஆகவும், அஞ்சலக

அட்டை வா.சா.ஆ.6 ஆகவும், பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு வா.சா.ஆ.7 ஆகவும், தபசில் வீட்டிற்கு வாதி செலுத்திய தீர்வை ரசீது வா.சா.ஆ.8 ஆகவும், தபசில் வீட்டிற்கு வாதி செலுத்திய குடிநீர் கட்டண ரசீது வா.சா.ஆ.9 ஆகவும், தபசில் வீட்டிற்கு வாதி செலுத்திய மின் கட்டண ரசீது வா.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8. வாதி தரப்பு மேற்படி ஆவணங்களில் வா.சா.ஆ.1 கிரையப் பத்திரத்தை பரிசீலனை செய்ததில், தபசில் சொத்தானது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், திருநெல்வேலியால் இந்த வழக்கின் வாதிக்கு கிரையம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.8 முதல் வா.சா.ஆ.10 வரையான ஆவணங்கள் மூலம் தபசில் வீட்டிற்கு வாதி பெயரில் தீர்வை ஏற்பட்டு வாதியே தீர்வை செலுத்தியும், மின் கட்டணமும், குடிநீர் கட்டணமும் செலுத்தி அனுபவித்து வந்துள்ளார் என்பது தெளிவாகிறது. இந்நிலையில் வாதி தரப்பில், வாதியின் மருமகன் மூலமாக பிரதிவாதி தபசில் வீட்டில் குடியிருக்க அனுமதி கேட்டதில், தவணை தொகையை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு பிரதிவாதி, வாதி சார்பாக செலுத்த வேண்டுமென்ற நிபந்தனையின்பேரில் வாதியால் பிரதிவாதி அனுமதிக்கப்பட்டு, பிரதிவாதி 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தபசில் வீட்டில் குடும்பத்துடன் குடியிருந்து வந்ததாகவும், ஆனால் ஒப்புக்கொண்டபடி பிரதிவாதி தவணைதொகைகளை உரிய காலத்தில் செலுத்தாமல் காலதாமதம் செய்து 2013 ஆம் ஆண்டு வரை மட்டுமே செலுத்தியுள்ளதாகவும், இந்நிலையில் வாதி தரப்பில் தபசில் வீடானது வாதியின் சொந்த அனுபவத்திற்கு தேவைப்பட்டதால் பிரதிவாதியிடம் வீட்டை காலி செய்து ஒப்படைக்கக்கோரி வாதி கேட்டதற்கு பிரதிவாதி கால தாமதம் செய்து வருவதால் பிரதிவாதியை தபசில் சொத்திலிருந்து அப்புறப்படுத்தி காலி சுவாதீனம் தர உத்தரவிடக்கோரப்பட்டுள்ளது. வாதியின் மேற்படி கூற்றுக்கு பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி தான் தபசில் சொத்தை அனுபவித்து வருவதாகவும், கடந்த 2013 ஆம் வருடமே மத்தியஸ்தர்கள் முன்னிலையில் வாதியிடம் பேசியபடி தவணை தொகை முழுவதையும் பிரதிவாதி கட்டி முடித்துவிட்டதாகவும், ஆனால் ஒப்புக்கொண்டபடி வாதி தான் தபசில் சொத்தை பிரதிவாதிக்கு கிரையம் கொடுக்க முன்வரவில்லை என்றும், பிரதிவாதியே அவரது சொந்த செலவில் தபசில் சொத்திற்கு மின் இணைப்பு, குடிநீர் இணைப்பு பெற்று கட்டணங்கள் செலுத்தி அனுபவித்து வருவதாகவும் குறிப்பிட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் பிரதிவாதியின் மேற்படி கூற்றை நிரூபிப்பதற்கு ஏதுவாக பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்கவில்லை. எந்த ஒரு சான்றாவணத்தையும் தாக்கல் செய்து மேற்படி வாதத்தை நிரூபிக்கவில்லை. மேலும், வாதி தரப்பு சாட்சியை பிரதிவாதி குறுக்கு விசாரணை செய்யவும் முன்வரவில்லை. மாறாக வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள வா.சா.ஆ.1 முதல் 10 வரையான சாட்சியங்களின் மூலம் தபசில் சொத்தானது வாதிக்கு பாத்தியப்பட்டு, வாதியின் அனுபவத்தில் இருந்து வருவது நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே வாதி கோரிய சுவாதீன பரிகாரம் வாதிக்கு கிடைக்கக் கூடியது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே எழுவினா எண்.1-ற்கு தீர்வு காணப்படுகிறது.

9. **<u>எழுவினா எண்கள்.2 மற்றும் 3-ற்கான தீர்வு</u>:**

- வாதி கோரியுள்ள கடந்த கால வரும்படி வட்டியுடன் வாதிக்கு கிடைக்கக் கூடியதா ?
- வாதி கோரியுள்ள எதிர் கால வரும்படி வட்டியுடன் வாதிக்கு கிடைக்கக் கூடியதா ?

வாதி தரப்பில் தபசில் சொத்தை பிரதிவாதி அனுபவித்து வந்ததற்காக மாதம் ஒன்றுக்கு ரூ.5000/- ஆக மதித்து மூன்று ஆண்டுகளுக்கு கடந்த கால வரும்படி தொகையாக ரூ.1,80,000/- ஐ 12 சதவிகித பின்வட்டியுடனும், பிராது தேதி முதல் தபசில் சொத்தை வாதியிடம் பிரதிவாதி அனுபவம் ஒப்படைக்கும் தேதி வரைக்கான எதிர்கால வரும்படி தொகையை வட்டியுடனும் வாதிக்கு பிரதிவாதி செலுத்த உத்தரவிட வேண்டுமென்று வாதிடப்பட்டது. தபசில் சொத்தின் அனுபவமானது வாதி வசம் உள்ளது வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக முந்தைய எழுவினாவிற்கு முடிவு காணப்பட்டிருந்தாலும், கடந்த கால வரும்படி மற்றும் எதிர்கால வரும்படி குறித்து உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 20 விதி 12-ன் கீழ் வாதி தனியாக மனு தாக்கல் செய்து பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்து அவ்வாறே எழுவினாக்கள் 2 மற்றும் 3 -ற்கு தீர்வு காணப்படுகிறது.

10. **<u>எழுவினா எண்.4-ற்கான தீர்வு</u>:**

- பிரதிவாதி கோரிய நிறையீட்டு செலவுத்தொகை பிரதிவாதிக்கு கிடைக்கக் கூடியதா?

பிரதிவாதி தரப்பில், வாதி தரப்பு வழக்கினை மறுத்துரைத்தும் வழக்கின் நிறையீட்டுச் செலவுத்தொகை கோரியும் எதிர்வழக்குரை தாக்கல் செய்திருந்தாலும், பிரதிவாதியின் ஆட்சேபணையானது அவர் தரப்பில் உரிய சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்படவில்லை. பிரதிவாதியும் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. எனவே பிரதிவாதி கோரியுள்ள நிறையீட்டு செலவுத்தொகை பிரதிவாதிக்கு கிடைக்கக் கூடியதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே எழுவினா எண்.4-ற்கு தீர்வு காணப்படுகிறது.

11. **<u>எழுவினா எண்.5-ற்கான தீர்வு</u>:**

- வாதிக்கு கிடைக்கக் கூடிய வேறு பரிகாரம் என்ன?

முந்தைய எழுவினாக்களுக்கு காணப்பட்ட தீர்வுகளின் அடிப்படையில் வாதிக்கு வேறு பரிகாரம் கிடைக்கக் கூடியதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே எழுவினா எண். 5-ற்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, வாதியின் வழக்கு அனுமதிக்கப்பட்டு, பிராது தபசில் சொத்தின் அனுபவத்தை வாதியிடம், பிரதிவாதி இரண்டு மாத காலத்திற்குள் ஒப்படைக்க வேண்டுமென்று தீர்ப்பளிக்கப்படுகிறது. கடந்த கால மற்றும் எதிர்கார வரும்படி பரிகாரங்களைப் பொறுத்து வாதி உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 20 விதி 12-ன் கீழ் வாதி தனியாக மனு தாக்கல் செய்து பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்பானது சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பிழைதிருத்தப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28 ஆம் நாளான இன்று அவையறியப் பகரப்பட்டது.

MANOJKUMAR S Digitally signed by MANOJKUMAR S Date: 2025.04.28 17:41:34 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,

தென்காசி

**<u>வாதி தரப்பு சாட்சி</u>**

வா.சா.1 திரு. மதார் முகைதீன் (வாதி)

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 22.01.2021 | திருநெல்வேலியில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமானது, வாதிக்கு பிறப்பித்துக் கொடுத்துள்ள கிரையப் பத்திரம் அசல் |
| வா.சா.ஆ.2 | 01.10.1997 | தபசில் சொத்திற்கு வாதி பெயரில் உள்ள தீர்வை ரசீது |
| வா.சா.ஆ.3 | - | தபசில் சொத்திற்கு வாதி பெயரில் உள்ள தீர்வை ரசீதுகள் 7 எண்ணிக்கை |
| வா.சா.ஆ.4 | 14.08.2020 | தபசில் சொத்திற்கு வாதி செலுத்தியுள்ள மின் கட்டண ரசீது |
| வா.சா.ஆ.5 | 01.04.2021 | வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் |
| வா.சா.ஆ.6 | - | அஞ்சலக ஒப்புகை அட்டைகள் 2 எண்ணிக்கை |
| வா.சா.ஆ.7 | 16.04.2021 | பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு |
| வா.சா.ஆ.8 | 07.04.2021 | தபசில் சொத்திற்கு வாதி செலுத்தியுள்ள தீர்வை ரசீது |
| வா.சா.ஆ.9 | 07.04.2021 | தபசில் சொத்திற்கு வாதி செலுத்தியுள்ள குடிநீர்கட்டண ரசீது |
| வா.சா.ஆ.10 | 22.03.2021 | தபசில் சொத்திற்கு வாதி செலுத்தியுள்ள மின்கட்டண ரசீது |

MANOJKUMAR S Digitally signed by MANOJKUMAR S Date: 2025.04.28 17:41:48 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,

தென்காசி

---

கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,

தென்காசி

அசல் வழக்கு எண்.191/2021

தீர்ப்புரை (நேரிய)

நாள்: 28.04.2025

---